மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரங்கநாதன், உங்களைப் பிறகு கூப்பிடுகிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இது ஆய்வு இல்லை. எதிர்க்கிறீர்களா, என்பதைச் சொல்லுங்கள்.

திரு. ப. ரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நாங்கள் இதை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் என்றால்? மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை உறுப்பினர்களுக்கு ஆளுநர் மாளிகையில் அளிக்கவிருக்கும் விருந்திற்குச் செல்ல பேருந்து வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று (7-5-2002) இரவு 8-00 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள்

2002 மே 7] [பேரவைத் தலைவர்]

சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புகளிலிருந்து ஆளுநர் மாளிகைக்குச் சென்று திரும்பப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பேருந்துகள் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புகளிலிருந்து முறையே இரவு 7-00, 7-15, மற்றும் 7-30 மணிக்குப் புறப்படும். விருந்து முடிந்ததும் ஆளுநர் மாளிகையிலிருந்து பேருந்துகள் மூலம் உறுப்பினர்கள் குடியிருப்புகளுக்குத் திரும்ப அழைத்து வரப்படுவார்கள். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் தவறாது விருந்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(இ) அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையிலும், பிற்பகலிலும் எடுத்துக்கொள்ள இருக்கின்ற மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் இரண்டு மானியக் கோரிக்கைகளையும் ஒன்றாகவே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

9. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 26 - தொழில் துறை

(ஆ) கோரிக்கை எண் 10-வணிக வரித் துறை — வணிக வரிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26—தொழில் துறை, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை மானியக் கோரிக்கை எண் 26-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.47,85,96,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.